**R 5304 (page 265)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை

## GOD'S SUPERVISION IN THE WORLD AND IN THE CHURCH

*"கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்." (சங்கீதம் 75:6, 7)*

**5305 : page 266**

### சபையினுடைய ஒழுங்குகள் குறித்த காரியங்கள்

நம்முடைய ஆதார வசனத்தைக் குறிப்பாக சபைக்கு - கர்த்தரினால் விசேஷமாய் நடத்தப்படுகின்றவர்களும், அவர் விசேஷமாய் அக்கறைக்கொண்டிருப்பவர்களுமாகிய சபைக்குப் பொருத்திப் பார்த்திடலாம். அவர் சபையினுடைய இந்த அங்கத்தினர்களை அவர்களுக்குரிய இடத்தில் வைத்திடுவதற்கு ஏற்பாடுகளை அருளியுள்ளார். "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில் வைத்தார்." "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும் . . . ஏற்படுத்தினார்" - இவைகள் கிறிஸ்துவினுடைய சரீரத்திலுள்ள பற்பல அலுவல்களைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று தேவன் அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

இருபதுபேர் அல்லது முப்பதுபேர் அல்லது முந்நூறுபேர் அல்லது ஐந்நூறுபேர் அல்லது ஆயிரம்பேர் தங்களை அவர் சித்தத்துடன் இசைய பண்ணிடும்போது, அவர் சிலரை மூப்பர்களாக, சிலரை உதவிக்காரர்களாக, இன்னும் சிலராக வைப்பார். அவர் எப்படி அவர்களை வைப்பார்? சபையினுடைய வாக்கின் (vote) மூலமாகவேயாகும். சபையில் உதவிக்காரனாக நியமிக்கப்படுகிறவன் எவனும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும். மூப்பனாக நியமிக்கப்படுகிற எவனும், இதை ஒரு சிலாக்கியமாகக் கருதிட வேண்டும் மற்றும் கர்த்தருக்கும், சகோதரருக்கும் உண்மையாய்க் காணப்பட வேண்டும்; இதினிமித்தம் அவன் சபைக்கு நன்மை பயக்கும் விதமாயும், சகோதரருக்குப் பிரியமாயும் மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்குப் பிரியமாயும் காணப்படலாம்.

இந்த ஒரு கருத்தையே அப்போஸ்தலன் எபேசு சபையின் மூப்பர்களுக்கு விடைகொடுக்கும்போது பேசிய வார்த்தைகளில் தெரிவிக்கின்றார் (அப்போஸ்தலர் 20:17-38). அவர்கள் மந்தையைப் போஷிக்கத்தக்கதாக, தங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு அவர்களுக்குக் கூறுகின்றார். கர்த்தரிடமிருந்தும், சகோதரரிடமிருந்தும் வருகின்றதெனத் தங்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டியதான, தங்கள் வாய்ப்புகளுக்காகவும் மற்றும் பொறுப்புகளுக்காகவும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களெனத் தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் எப்படிக் காணப்பட வேண்டுமென்று பல ஆலோசனைகளை அப்போஸ்தலன் கொடுத்திட்டார்.

சிலசமயம் கர்த்தருடைய அனுமதியின் காரணமாக - நிச்சயமாய் அவரது அனுமதி இல்லாமல் அல்ல, அவரது அனுமதியின் காரணமாகவே - கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்கான தங்களது பிரயாசத்தில் சபையார் பின்வருமாறு கூறிடலாம்: 'இந்தச் சகோதரன் கடந்தமுறை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் இம்முறை நாம் அவரை மூப்பராகத் தேர்ந்தெடுக்க வேண்டாம்'; இல்லையேல் அவர்கள் பின்வருமாறு கூறிடலாம்: 'இவர் கடந்தமுறை உதவிக்காரனாக இருந்தார் மற்றும் இம்முறை நாம் அவரை உதவிக்காரனாகத் தேர்ந்தெடுக்க வேண்டாம், அவரை விட்டுவிடலாம்.' இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படும் சகோதரனுடைய மனோநிலை என்னவாக இருக்க வேண்டும்?

**R5305 : page 267**

### கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல்

தங்கள் திறமையை சபையார் அடையாளம் கண்டுகொள்ளாததிலும், தங்களை

மீண்டுமாகத் தேர்ந்தெடுக்காத விஷயத்திலும் சபையார் தவறு செய்துள்ளனர் என்று தாங்கள் எண்ணுவதாக, தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்பட்டவர்களிடமிருந்து கடிதங்கள் நமக்கு வந்த அனுபவங்கள் நமக்குண்டு. சபையாரின் இத்தகைய செய்கைக்குப் பின்னாக இருக்கும் கருத்து என்ன என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், சபையார் ஞானமாய் நடந்துகொண்டார்களா அல்லது இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது என்றும், ஆனாலும் அச்சகோதரன் இந்தத் தீர்மானம் கர்த்தரிடத்திலிருந்து வந்ததென ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது என்றும் எங்களுடைய பதில் காணப்பட்டது.

அப்படியான சகோதரன் தன்னிடம் பின்வருமாறு கூறிக்கொள்ள வேண்டும்: ‘நான் இந்தச் சபையாருடைய ஊழியக்காரனாக இருந்திருக்கிறேன் மற்றும் இது குறித்து நான் நன்கு உணர்ந்தும் இருந்திருக்கின்றேன். அந்த ஊழிய உயர்வானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும், எனக்குக் கொடுக்கப்பட்டதான ஊழியமானது கர்த்தரிடமிருந்து வந்தது என்றும் நான் உணருகின்றேன். ஆனால் இப்பொழுது தேவனுடைய வழிநடத்துதலின்படி நான் ஒரு வருடக் காலமாக (அ) ஆறுமாதக் காலமாக (அ) சில காலமாகக் கண்காணியாக இருக்கப்போவதில்லை. அநேகமாகக் கர்த்தர் எனக்கு இதில் நல்லதொரு பாடம் வைத்திருப்பார். அநேகமாகத் தாம் யாரை உயர்த்துவார் மற்றும் யாரை உயர்த்தமாட்டார் என்பதைக் காண்பிப்பதற்குக் கர்த்தர் விரும்புகின்றார். ஆகையால் இது விஷயம் குறித்துக் காயமடைவதற்கு அல்லது கொஞ்சம் கோபமடைவதற்கு அல்லது வருத்தமடைவதற்குப் பதிலாக நான் என்னிடம் சொல்லப்போவதென்னவெனில்: ஒருவேளை என்னுடைய கடமையைச் செய்வதில் நான் எதிலாகிலும் தவறியுள்ளதாக நான் காண்கின்றேன் என்றால், இது கர்த்தரிடமிருந்து எனக்கு வந்த சிட்சை எனக் கருதிடுவேன். "சகோதரர் தாங்கள் உயர்வு பெறும்போது மகிழ்ச்சியடைவார்களாக! மற்றும் சகோதரர் தாங்கள் தாழ்நிலை அடையும்போதும் மகிழ்ச்சியாய் இருப்பார்களாக!" என்னும் வேத வாக்கியத்தின் வார்த்தைகளை நான் நினைவில்கொள்வேன் (யாக்கோபு 1:9, 10 திருவிவிலியம்) கர்த்தருடைய சித்தம் என்னவென்று தாங்கள் கருதுவதைச் செய்திடும் விஷயத்தில் சபையார் சுதந்தரமாய்ச் செயல்படுவதைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாச் சூழ்நிலையிலும் உயர்வானது கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் வராது என்றும், தேவனே நியாயாதிபதியாக, தீர்மானிப்பவராக இருக்கின்றார் என்றும், அவருக்குப் பிரியமாய் இருக்கும் எவரையும், அவர் சபையின் காரியங்கள் மீது வைப்பார் என்றும் நான் அடையாளம் கண்டுகொள்ள முயற்சிப்பேன்’ என்பதேயாகும்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com